# ஆனந்தபுரத்தின் தீராத தாகம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் கோப்பாய் பிரதேச செயலகத்திற்கு உட்பட்டது ஆனந்தபுரம். இக்கிராமத்தில் நீண்டகாலமாக நிலவிவரும் பிரச்சினைகளில் ஒன்றாக இந்த குடிநீர் பிரச்சினை காணப்படுகின்றது. இங்கும் காணப்படும் கிணறுகளின் நீர் வெறும் உப்பு நீராகவே காணப்பட்டு வருவதால் மக்கள் தொலைதூரத்திற்கு சென்றே குடிநீரை சுமந்து வரவேண்டிய நிலை காணப்படுகின்றது. குறிப்பாக பெண்கள் நீர் குடங்களை சுமந்த வண்ணமும், சிறுவர்கள் கைகளிலும் தோள்களிலும் தாங்கிய வண்ணம் குடிநீரைத் சுமந்து வரவேண்டிய அவல நிலையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலாளர், வலிகிழக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் ஏனைய பொறுப்பான அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடம் கடிதங்கள் மூலமாகவும் வாய்மூலமாகவும் தெரிவித்து முழுமையான எந்தவித தீர்வும் கிடைக்க பெறப்படவில்லை. பின் 2002ஆம் ஆண்டளவில் வலிகிழக்கு பிரதேச சபையிடம் இருந்து நீர்த்தாங்கி மூலமாக லீற்றருக்கு 4/= வீதம் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு 28 லீற்றர் வீதம் அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒன்றுவிட்ட ஒரு நாள் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இது ஓரளவிற்கு வசதியுள்ள ஒருசில குடும்பங்களே பெற்று வந்தனர். இச் செயற்பாடும் நாளடைவில் இல்லாது போக மக்கள் மழைக் காலங்களில் மிகவும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்துள்ளனர்.

தொடர்ந்தும் மக்களின் விடா முயற்சியாலும் ஆனந்தபுரம் சனசமூக நிலைய நிர்வாகத்தின் நெருக்கடியாலும் ஓர் அரசியல் கட்சியின் உதவியுடனும் மீண்டும் வலிகிழக்கு பிரதேச சபையால் ஓர் நீர்த் தாங்கி இலவசமாக பொதுவான ஓர் இடத்தில் வைக்கப்பட்டது.

இதன் விஷேடதுவம் என்னவென்றால் 148 குடும்பங்கள் வசிக்கும் இக்கிராமத்தில் வெறும் 1000லீற்றர் குடிநீரே நிரப்பப்பட்டது. அதுவும் ஒன்றுவிட்ட ஒரு நாள் என்று கூறி நாளடைவில் கிழமைக்கு ஒரு நாள் வந்து நீர்தாங்கிக்கு நீரேற்றிவிட்டுச் செல்வார்கள். இதன் போது முதலில் நீர் எடுக்கும் மக்கள் போக பின்னால் வரிசையில் நிற்கும் மக்களுக்கு நீர் இல்லாது போக மக்களிற்கு வாய்ச் சண்டை மூண்டு கைகலப்பாக மாறி பொலிஸ் நிலையம் வரை சென்ற சம்பவங்களும் அதிகமாகவே காணப்படுகின்றது. இந்த குடிநீர்ச் சண்டையானது தினந்தோறும் மக்கள்

மத்தியில் இடம்பெற்று வருகின்றது. இதற்கு அடிப்படை காரணமே குடிநீர்ப் பிரச்சினையாகும்.

இக் குடிநீர் போதாமைத் தொடர்பில் மீண்டும் மீண்டும் தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதிலும் இன்றுவரையில் இப்பிரச்சினைக்கு எவ்வித தீர்வும் பெறப்படவில்லை. எனவே எமது இந்த தீராத தாகத்திற்கு தீர்வு கிடைக்கும் என்ற ஆவலும், எதிர்பார்ப்புடனும் காத்திருக்கும் ஆனந்தபுரம் மக்களது ஏக்கம் தீர்க்கப்படுமா?

.

டிபன் சஞ்சிகா

ஆனந்தபுரம்

கோப்பாய்